ஆறாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 2

1] நாய்க்கால் சிறுவிரல்போல் நன்கணிய ராயினும் ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னாம் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?

1] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

3] கலிங்கத்துப்பரணி, சயம் கொண்டார்

4] நாலடியார், சமண முனிவர்கள்

2] சேய்த்தானும் சென்று கொளல்வேண்டும் செய்விளைக்கும் வாய்க்கால் அனையார் தொடர்பு - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?

1] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

3] கலிங்கத்துப்பரணி, சயம் கொண்டார்

4] நாலடியார், சமண முனிவர்கள்

3] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.

1] சேய்மை - அருகில்

2] செய் - வயல்

3] அனையார் - போன்றோர்

4] அணியர் - நெருங்கி இருப்பவர்

குறிப்பு :- சேய்மை - தொலைவு

4] நாலடியார் ---------- நூல்களுள் ஒன்று.

1] ஐம்பெரும் காப்பியங்கள்

2] ஐஞ்சிறு காப்பியங்கள்

3] பதினெண் கீழ்க்கணக்கு

4] பதினெண் மேல்கணக்கு

5] நாலடியார் ---------- பாடல்களைக் கொண்டது

1] 96

2] 108

3] 350

4] 400

குறிப்பு :- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று நாலடியார். இந்நூல் நானூறு பாடல்களைக் கொண்டது. அறக்கருத்துக்களைக் கூறுவது. 'நாலடி நானூறு' என்னும் சிறப்புப் பெயரும் இதற்கு உண்டு. இந்நூல் சமண முனிவர் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பு.

6] பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் பெரும்பாலானவை ----------?

1] நீதி நூல்கள்

2] அற நூல்கள்

3] சமய நூல்கள்

4] இவற்றில் ஏதுமில்லை

7] ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்; ஆலைகள் வைப்போம்கல்விச் சாலைகள் வைப்போம்; ஓயுதல் செய்யோம்தலை சாயுதல் செய்யோம்; உண்மைகள் சொல்வோம்பல வண்மைகள் செய்வோம் - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?

1] பாரதியார்

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

குறிப்பு :- "வெள்ளிப் பனிமலையின்மீது உலாவுவோம்" எனத் தொடங்கும் பாடலின் ஒரு பகுதி.

8] குடைகள் செய்வோம்உழு படைகள் செய்வோம்; கோணிகள் செய்வோம்இரும் பாணிகள் செய்வோம்; நடையும் பறப்புமுணர் வண்டிகள் செய்வோம்; ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம் - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?

1] பாரதியார்

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

குறிப்பு :- "வெள்ளிப் பனிமலையின்மீது உலாவுவோம்" எனத் தொடங்கும் பாடலின் ஒரு பகுதி.

9] காவியம் செய்வோம் நல்ல காடு வளர்ப்போம்; கலை வளர்ப்போம் கொல்லர் உலைவளர்ப்போம்; ஓவியம் செய்வோம்நல்ல ஊசிகள் செய்வோம்; உலகத் தொழிலணைத்தும் உவந்து செய்வோம் - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?

1] பாரதியார்

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

குறிப்பு :- "வெள்ளிப் பனிமலையின்மீது உலாவுவோம்" எனத் தொடங்கும் பாடலின் ஒரு பகுதி.

10] சாதி இரண்டொழிய வேறில்லை யென்றே; தமிழ்மகள் சொல்லியசொல் அமிழ்தமென்போம்; நீதி நெறியினின்று பிறர்க்குதவும்; நேர்மையர் மேலவர், கீழவர் மற்றோர் - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?

1] பாரதியார்

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

குறிப்பு :- "வெள்ளிப் பனிமலையின்மீது உலாவுவோம்" எனத் தொடங்கும் பாடலின் ஒரு பகுதி.

11] "பாட்டுக்கொரு புலவன் ----------" என்று கொண்டாடப்பட்டவர்?

1] பாரதியார்

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

12] பாரதியார் அவர்களின் காலம்?

1] 11.12.1882 முதல் 11.09.1921 வரை

2] 11.12.1892 முதல் 11.09.1931 வரை

3] 11.12.1872 முதல் 11.09.1921 வரை

4] 11.12.1852 முதல் 11.09.1911 வரை

13] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.

1] வண்மை - பகை

2] கோணி - சாக்கு

3] தமிழ்மகள் - ஒளைவையர்

4] ஞாலம் - உலகம்

குறிப்பு :- வண்மை - கொடை

14] "சாதி இரண்டொழிய வேறில்லை" - எனக் கூறிய தமிழ்மகள் ----------?

1] காக்கைப் பாடியனார்

2] ஆதிமந்தி

3] ஔவையார்

4] வெள்ளி வீதியார்

15] உலகம் முழுவதும் இருந்து பல நாட்டுப் பறவைகள் வந்து தங்கி இருக்கும் இடத்துக்குப் பெயர்தான் ----------?

1] பட்டி

2] தொழுவம்

3] பறவைகள் புகலிடம்

4] கூடு

16] தமிழ்நாட்டில் பட்டாசு வெடிக்காத ஊர் எது?

1] வத்தலக்குண்டு (திண்டுக்கல்)

2] மன்னார்குடி (திருவாரூர்)

3] சிவகாசி (விருதுநகர்)

4] கூந்தன்குளம் (திருநெல்வேலி)

17] பனி மற்றும் வெயில் கூடுதலாக இருக்கும் போது பறவைகள் அந்த இடத்தை விட்டுப் பறந்து செல்லும். இப்படிப் பறந்து செல்வதனை, ---------- என்பார்கள்.

1] நகர் வலம்

2] இடப்பெயர்ச்சி காலம்

3] வலசை போதல்

4] இவற்றில் ஏதுமில்லை

18] நம் நாட்டில் ஏறத்தாழ ---------- வகைப் பறவைகள் வாழ்கின்றன.

1] 14500

2] 13800

3] 9800

4] 2400

19] பறவைகளை ---------- வகையாகப் பிரிக்கலாம்.

1] 2 2] 3 3] 4 **4] 5**

குறிப்பு :- பறவைகளை ஐந்து வகையாகப் பிரிக்கலாம், அவையாவன:-

1. தேனைக் குடித்து வாழும் பறவைகள்; 2. பழத்தை உண்டு வாழும் பறவைகள்; 3. பூச்சியைத் தின்று வாழும் பறவைகள்; 4. வேட்டையாடி உண்ணும் பறவைகள்; 5. இறந்த உடல்களை உண்டு வாழும் பறவைகள்

20] ---------- பறவை நிலத்திலும் அடர் உப்புத் தன்மை உள்ள நீரிலும் வாழும். கடும் வெப்பத்தை எதிர்கொள்ளும் தன்மை கொண்டது.

1] கடலைக்குயில்

2] பனங்காடை

3] தூக்கணாங்குருவி

4] பூநாரை

21] தவறானது எது? சமவெளி மரங்களில் வாழும் சில பறவைகள்: மஞ்சள் சிட்டு, செங்காகம், சுடலைக்குயில், பனங்காடை, தூக்கணாங்குருவி, அரிவாள் மூக்கன்.

1] சுடலைக்குயில்

2] பனங்காடை

3] தூக்கணாங்குருவி

4] அரிவாள் மூக்கன்

குறிப்பு :- நீர்நிலையில் வாழும் பறவை - அரிவாள் மூக்கன்

22] தவறானது எது? நீர்நிலைகளில் வாழும் சில பறவைகள்: கொக்கு, தாழைக்கோழி, பவளக் காலி, ஆற்று உள்ளான், முக்குளிப்பான், நாரை, அரிவாள் மூக்கன், கரண்டி வாயன், ஊசிவால் வாத்து, பனங்காடை.

1] அரிவாள் மூக்கன்

2] கரண்டி வாயன்

3] ஊசிவால் வாத்து

4] பனங்காடை

குறிப்பு :- சமவெளி மரங்களில் வாழும் பறவை - பனங்காடை.

23] தவறானது எது? மலைகளில் வாழும் சில பறவைகள்: இருவாச்சி, செந்தலைப் பூங்குருவி, மின்சிட்டு, கருஞ்சின்னான், நீலகிரி நெட்டைக்காலி, பொன்முதுகு, மரங்கொத்தி, சின்னக்குறுவான், கொண்டை உழவாரன், இராசாளிப் பருந்து, பூமன் ஆந்தை, கரண்டி வாயன்.

1] கொண்டை உழவாரன்

2] இராசாளிப் பருந்து

3] பூமன் ஆந்தை

4] கரண்டி வாயன்

குறிப்பு :- நீர்நிலையில் வாழும் பறவை - கரண்டி வாயன்.

24] பாம்பினம், உலகில் மனித இனம் தோன்றுவதற்கு ---------- ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியது.

1] 100 கோடி

2] 10 கோடி

3] 100 இலட்சம்

4] 10 இலட்சம்

25] கீழ்க்கண்ட கூற்று எந்த பாம்பைப் பற்றியது?

இந்தியாவில் உள்ள ---------- பாம்பு தான் உலகிலேயே நஞ்சுமிக்க மிக நீளமான பாம்பு. 15 அடி நீளமுடையது. கூடுகட்டி வாழும் ஒரே வகைப் பாம்பு இது. மற்றப் பாம்புகளையும் கூட உணவாக்கிக் கொள்ளும்.

1] மலைப்பாம்பு

2] கொம்பேறி மூக்கன்

3] இராஜநாகம்

4] கண்ணாடி விரியன்

26] சென்னையில் பாம்புப் பண்ணை உள்ள இடம்?

1] நுங்கம்பாக்கம்

2] ராயபுரம்

3] கிண்டி

4] திருவான்மியூர்

27] உலகம் முழுக்க ---------- வகைப் பாம்புகள் இருக்கின்றனவாம். இந்தியாவில் மட்டும் ---------- வகைப்பாம்புகள் காணப்படுகிறது.

1] 4000, 670

2] 1456, 450

3] 3250, 567

4] 2750, 244

28] பாம்பு வகைகளில் ---------- வகைப்பாம்புகளுக்கு மட்டும்தான் நச்சுத்தன்மை இருக்கிறது.

1] 15

2] 45

3] 52

4] 67

29] கீழ்க்கண்ட கூற்றில் தவறானது எது?

1] பாம்பு, பால் குடிக்காது. அவை விழுங்குகிற எலி, தவளைகள் உடம்பில் உள்ள நீர்ச்சத்தே அதற்குப் போதும். பாம்பு, தான் பிடிக்கும் இரையைக் கொல்லவும், செரிப்பதற்காகவும் தன்னுடைய பற்களில் நஞ்சு வைத்திருக்கிறது

2] ஒரு பாம்பைக் கொன்றால், அதன் இணைப் பாம்பு பழிவாங்கும் என்று சொல்வது உண்டு. இஃது உண்மையன்று. கொல்லப்பட்ட பாம்பின் உடம்பில் இருந்து வெளியேறும் ஒருவகை வாசனைப் பொருள், மற்றப் பாம்புகளையும் அந்த இடம் நோக்கி வரவழைக்கிறது. பழிவாங்க, பாம்புகள் வருவது இல்லை

3] பாம்பு, தன் நாக்கை அடிக்கடி வெளியே நீட்டும், சுற்றுப்புறத்தின் வாசனையை அறிந்துகொள்ளவே அவ்வாறு செய்கிறது.

4] பாம்புக்கு காது நன்றாக கேட்கும்

குறிப்பு :- பாம்புக்குக் காது அவ்வளவாக வளர்ச்சி அடையவில்லை. காற்றில் வரும் ஓசைகளைப் பாம்பினால் கேட்க இயலாது. தரையில் ஏற்படும் அதிர்வுகளை உணர்ந்து, அதன்மூலம் பாம்பு முன்னெச்சரிக்கையாக இருக்கிறது.

30] ---------- பாம்பின் நஞ்சு, கோப்ராக்சின் என்னும் வலிநீக்கி மருந்து செய்யப் பயன்படுகிறது.

1] இராஜநாகம்

2] கண்ணாடி விரியன்

3] சாரைப் பாம்பு

4] நல்ல பாம்பு

31] தோலுக்காகப் பாம்புகள் கொல்லப்படுவதனைத் தடுக்க, இந்திய அரசு, வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் ---------- இன்படி சட்டம் நிறைவேற்றி உள்ளது.

1] 1969

2] 1970

3] 1971

4] 1972

32] ---------- உழவர்களின் நண்பன்.

1] எலி

2] நாய்

3] பறவை

4] பாம்பு

33] தமிழ் நாட்டில் உள்ள பறவைகள் புகலிடங்கள். தவறான மாவட்டம் எது?

1] வேடந்தாங்கல், கரிக்கிரி (காஞ்சிபுரம் மாவட்டம்)

2] கஞ்சிரங்குளம், சித்திரங்குடி, மேல்செல்வனூர் (இராமநாதபுரம் மாவட்டம்)

3] பழவேற்காடு (திருவள்ளூர் மாவட்டம்)

4] உதயமார்த்தாண்டம் (விருதுநகர் மாவட்டம்)

குறிப்பு :- உதயமார்த்தாண்டம் (திருவாரூர் மாவட்டம்)

34] தமிழ் நாட்டில் உள்ள பறவைகள் புகலிடங்கள். தவறான மாவட்டம் எது?

1] வடுவூர் (தஞ்சை மாவட்டம்)

2] கரைவெட்டி (பெரம்பலூர் மாவட்டம்)

3] வேட்டங்குடி (சிவகங்கை மாவட்டம்)

4] வெள்ளோடு (திருச்சி மாவட்டம்)

குறிப்பு :- வெள்ளோடு (ஈரோடு மாவட்டம்)

35] தமிழ் நாட்டில் உள்ள பறவைகள் புகலிடங்கள். தவறான மாவட்டம் எது?

1] பழவேற்காடு (திருவள்ளூர் மாவட்டம்)

2] கரைவெட்டி (பெரம்பலூர் மாவட்டம்)

3] கூந்தன்குளம் (திருநெல்வேலி மாவட்டம்)

4] கோடியக்கரை (திருவாரூர் மாவட்டம்)

குறிப்பு :- கோடியக்கரை (நாகப்பட்டினம் மாவட்டம்)

36] தமிழில் உள்ள முதல் எழுத்துகள் மொத்தம் ----------?

1] 12

2] 18

3] 30

4] 216

37] தமிழ்நாட்டில் உள்ள பறவைகள் சரணாலயங்கள் எத்தனை?

1] 10

2] 13

3] 12

4] 16